1979 பிப்ரவரி 22]

(5) அரசினர் தீர்மானம்

விதி 23-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை "தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 23-ஐத் தளர்த்தி, இப்பேரவையில் இன்று அரசினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

(6) கவன ஈர்ப்புகள்

அரிசன மக்களை ஏமாற்றி வட மாநிலம் அழைத்துச் சென்று கொடுமைபடுத்தி வேலை வாங்கியதாகக் கூறப் பெறுவது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 41-ன்கீழ் திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், சேலம் மு. ஆறுமுகம், ஆகியோர் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியம் மேல்வில்வராய நல்லூர் அரிசன மக்கள் 21 பேரை ஏமாற்றி அதிகக் கூலி தருவ தாகக் கூறி உத்திரப் பிரதேச மாநிலம், மீர்ஜாப்பூர் மாவட்டம், தல்லா என்னுமிடத்திற்கு அழைத்துச் சென்று இரண்டு மாத காலம் ஸ்ரீகன்னா கம்பெனியில் வேலை கொடுமையான முறையில் வாங்கப்பட்டு சிலர் கொடுமைகள் தாங்க முடியாமல் இறந்து விட்டும், கூலியும் கொடுக்கப்படாமல் ஏமாற்றப்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து, மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலவைர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியைச் சேர்ந்த 21 அரிசனங்கள் உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கான்ராக்டருக்கு விற்பனை செய்யப்பட்டு இருப்பதாக 1979ஆம் ஆண்டுசனவரி திங்களில் நடந்த வட ஆற்காடு மாவட்ட வளர்ச் சிக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்தப் புகாரை ஒட்டி வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்தார்.